இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 293 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 20– சனிக்கிழமை 03 ஜூன் 2023 – மதுரை 64+12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 293: Thiruvalluvar Year - 2054 - Vaikasi 20 - Saturday 03 June 2023 - Madurai 64+ 12 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.6.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் முன்னிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், துறைச் செயலாளர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.6.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியை, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், துறைச் செயலாளர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# கலைஞர் பன்னாட்டு அரங்கம்!

## சென்னையில் நிறுவப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 3-

**தலைநகர் சென்னையில் உலகத் தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் அறிவித்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (2.6.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு ஆற்றிய உரை வருமாறு:-

பாலர் இல்லமாக இருந்த இந்த இடம், தலைவர் கலைஞர் அவர்களால் கலைவாணர் அரங்கமாக ஆக்கப்பட்டு, அந்த கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு இலச்சினை, அதாவது 'லோகோ' வெளியீட்டு விழாவிற்குச் சிறப்பு சேர்க்கக்கூடிய வகையில் நம்முடைய பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் வருகை தந்திருக்கிறார்கள்.

### கலைஞரை வாழ்த்த – காந்தியின் பேரன் வருகை!

தந்தை பெரியாரின் கொள்கை வாரிசான தலைவர் கலைஞரை வாழ்த்துவதற்காக மகாத்மா காந்தியின் பேரன் அவர்கள் இங்கே வருகை தந்திருக்கிறார்.

திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக நாங்கள் இருந்தாலும், அண்ணல் காந்தியடிகளுக்கும் எங்கள் இயக்கத்துக்குமான தொடர்பை மரியாதைக்குரிய திரு. கோபாலகிருஷ்ணன் காந்தி அவர்கள் நன்கு அறிவார்.

தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்குவதற்கு முன்பு காங்கிரஸ் இயக்கத்தில் அண்ணல் காந்தியடிகளின் தொண்டராகத்தான் இருந்தார். கதராடை உடுத்தினார். கதர்த் துணி களோடு நாடு முழுவதும் சுற்றினார். கள்ளுக்கடை மறியல் நடத்தினார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் இருந்தார். வகுப்புரிமையைக் காக்க தனி இயக்கம் தேவை என்பதால் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார் தந்தை பெரியார் அவர்கள்.

மதவெறியன் கோட்சேவால் மகாத்மா காந்தி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோது, தந்தை பெரியார் அடைந்த வேதனை என்பது வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. “இருந்த காந்தி, அவர்கள் காந்தி! இறந்த காந்தி, எங்கள் காந்தி!” என்றார்.

அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்களும் அண்ணல் காந்தியடிகள் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். ‘உலகப் பெரியார் காந்தி’ என்ற தலைப்பில் 1948ஆம் ஆண்டு ஒரு புத்தகம் எழுதினார் பேரறிஞர் அண்ணா.

> **‘திராவிடக் கப்பல் சென்றடைய வேண்டியது கூட்டாட்சித் துறைமுகம்’ என்றும், ‘தந்தை பெரியாரின் இலட்சிய அரசியலை, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் செல்வாக்கு, ஆட்சிப்பீடத்தில் அமர்த்தியது’ என்றும் எழுதியவர் கோபால கிருஷ்ணன் காந்தி அவர்கள். மேலும், ‘பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் அரசியல் என்பது ஏழைகளுக்கு ஆதரவான, உழவர்களுக்கு ஆதரவான, சாமானிய மக்களுக்கு ஆதரவான, சாதியத்துக்கு எதிரான, மதவாதத்துக்கு எதிரான கொள்கைகளின் வழியே ஆட்சியதிகாரத்தை அணுகுவது’ என்றும் எழுதியிருக்கிறார்.**

அண்ணல் காந்தி அவர்கள் கொல்லப்பட்ட போது,

“காந்தியாரின் புகழொளியை அல்ல,

அவரது உழைத்து அலுத்த உடலைத்தான் வெறியன் சுட்டு வீழ்த்தினான்” என்று

தனது ‘திராவிட நாடு’ இதழில் எழுதினார்.

அந்த வரிசையில்தான் கலைஞர் அவர்களும் அண்ணல் காந்தியடிகள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். நாங்கள் எப்படி அண்ணல் காந்தியடிகள்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறோமோ, அதைப் போல தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - தலைவர் கலைஞர் - திராவிட இயக்கம் மீது மதிப்பு கொண்டவர்தான் நம்முடைய கோபாலகிருஷ்ணன் காந்தி அவர்கள்.

‘திராவிடக் கப்பல் சென்றடைய வேண்டியது கூட்டாட்சித் துறைமுகம்’ என்றும் சொன்னார். ‘தந்தை பெரியாரின் இலட்சிய அரசியலை, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் செல்வாக்கு, ஆட்சிப்பீடத்தில் அமர்த்தியது’ என்றும் எழுதியவர் கோபாலகிருஷ்ணன் காந்தி அவர்கள். மேலும், ‘பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் அரசியல் என்பது ஏழைகளுக்கு ஆதரவான, உழவர்களுக்கு ஆதரவான, சாமானிய மக்களுக்கு ஆதரவான, சாதி யத்துக்கு எதிரான, மதவாதத்துக்கு எதிரான கொள்கைகளின் வழியே ஆட்சியதிகாரத்தை அணுகுவது’ என்றும் எழுதியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் உள்ள சிறைச் சாலைகளில் கனரக சலவை இயந்திரங்கள் வழங்கியபோது அதனை கோபாலகிருஷ்ணன் காந்தி அவர்கள் மனந்திறந்து பாராட்டினார்.

### காந்தியடிகளின் பேரன் வாழ்த்துவது; என் வாழ்வின் பேறு!

அண்ணல் காந்தியடிகளின் பேரனான அவர் இங்கு வருகை தந்து, கலைஞரையும், எங்களது ஆட்சியையும் பாராட்டிப் பேசியது எனக்கு வாழ்நாளில் கிடைத்தற்கரிய மாபெரும் பேறு! இந்த பெயரைக் காப்பாற்றும் வகையில் நான் நடந்து கொள்வேன் என்று மரியாதைக்குரிய கோபாலகிருஷ்ணன் காந்தி அவர்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

நாளை ஜூன் 3ஆம் நாள்!

வீழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு விடிவெள்ளியாய்த் தோன்றி, வாழும் காலத்தில் ஒளிதரும் உதயசூரியனாக வாழ்ந்து, நிறைந்த பின்பும் கலங்கரை விளக்கமாக வழிகாட்டிக் கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தோன்றிய நாள். அவரது பிறந்த நாள் என்பதைவிட, தமிழ்ச் சமுதாயத்திற்கு உயிராக உணர்வாக இருந்தவர் உதயமான நாள் என்றே சொல்ல வேண்டும்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா இலச்சினை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஜூன் 3-

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (2.6.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மேற்குவங்க மாநில முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் முன்னிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டார்.



**தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பிதழ்!**

12 – பக்கங்கள் இலவச இணைப்பு!

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக ஆற்றிய பணிகள், நிறைவேற்றிய திட்டங்கள் குறித்த குறும் படத்தையும் வெளியிட்டார்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் தமிழ்நாடு அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### தமிழ்த் திரையுலகில் மட்டுமல்ல; இசை உலகுக்கே அவர் ஒரு புரட்சி!

## எப்போதும் ராஜாதான்! வாழ்க நூறாண்டுகள் கடந்து!

### இசைஞானி இளையராஜாவின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் புகழாரம்!

சென்னை, ஜூன் 3-

**"தமிழ்த் திரையுலகில் மட்டுமல்ல; இசை உலகுக்கே அவர் ஒரு புரட்சி! அவர் எப்போதும் ராஜாதான்! வாழ்க அவர் நூறாண்டுகள் கடந்து" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இசைஞானி இளையராஜா அவர்களின் பிறந்த நாளையொட்டி வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் புகழாரம் சூட்டியுள்ளார்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**காலைப் பொழுது இனிதாய் மலர பயணங்கள் இதமாய் அமைய மகிழ்ச்சிகள் கொண்டாட்டமாய் மாற துன்பங்கள் தூசியாய் மறைய இரவு இனிமையாய்ச் சாய தமிழ்நாட்டின் தேர்வு 'இசைஞானி' இளையராஜா!**

**அவர் இசைக்கருவிகளை மீட்டுவதில்லை; நம் இதயங்களை வருடுகிறார். அவரே உணர்வாகி நம்முள் உருகுகிறார். தமிழ்த்திரையுலகில் மட்டுமல்ல; இசை உலகுக்கே அவர் ஒரு புரட்சி!**

**அதனால்தான், அவரது இசையின் நுட்பத்தை ஆழ்ந்து இரசித்து, அவரை 'இசைஞானி' எனப் போற்றினார் முத்தமிழ் வித்தகர் தலைவர் கலைஞர்.**

**இசை கொண்டு அவர் நிகழ்த்தும் மாய வித்தையில் மனம் மயங்கிச் சொக்கிக் கிடக்கும் இரசிகனாக உங்களில் ஒருவனாக அந்த மாபெரும் கலைஞனுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகளைக் கூறி மகிழ்ந்தேன்.**

**எங்கள் இதயங்களில் கோட்டை கட்டிக் கொடி நாட்டியிருக்கும் நீங்கள் எப்போதும் இராஜாதான்! வாழ்க நூறாண்டுகள் கடந்து!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.